## கடும் சிலிண்டர் தட்டுப்பாடு!

# ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டம்!



தமிழ்நாட்டுக்கு திட்டங்களும் இல்லை; அடுப்பு எரிக்க கேஸ் சிலிண்டரும் இல்லை! தமிழ்நாட்டைத் தொடர்ந்து வஞ்சித்து வரும் பா.ஜ.க. அரசையும் அதன் அடிமைக் கூட்டணியையும் கண்டித்து தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க சாபில் கும்பகோணம் மாநகரம். காந்தி பூங்கா அருகே நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் கண்ட உரையாற்றினார். இந்த கண்ட ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, சு.கல்யாணசுந்தரம் எம்.பி, மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன், தலைமை செயற்குழு உறுப்பினர் குட்டி இரா.தெட்சிணாமூர்த்தி உள்ளிட்ட கழக ஒன்றிய பகுதி பேரூர் செயலாளர்கள், தோழமைக் கட்சிகளின் மாவட்ட மாவட்ட நிர்வாகிகள் தொண்டர்கள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



ஒன்றிய பாஜக அரசின் எரிவாயு தட்டுப்பாட்டை கண்டித்து குன்னூர் விபி தெரு கலைஞர் திடலில் கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் பா.மு முபாரக் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



சென்னை தெற்கு மாவட்டம். மதுரவாயல் தெற்கு பகுதி மதசார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் ஒன்றிய பாஜக அரசின் தவறான வெளியுரவுக் கொள்கையால், சமையல் எரிவாயு தட்டுப்பாட்டை கண்டித்தும் தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் பா.ஜ.க. அரசையும் அதன் அடிமை கூட்டணியையும் கண்டித்து மதுரவாயல் தெற்கு பகுதி கழக செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. இந்த கண்டன ஆர்பாட்டத்தில் திராவிடர் இயக்க தமிழர் பேரவை தலைவர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் மற்றும் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி நிர்வாகிகள் கலந்துகொண்டு கண்டன உரையாற்றினார்கள். இந்த கண்டன ஆர்பாட்டத்தில் மதுரவாயல் தெற்கு பகுதிக்குட்பட்ட மதசார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சியினர், கழக முன்னோடிகள் மற்றும் கழக தோழர்கள் பெருந்திரளாக கலந்துகொண்டனர்.



ஒன்றிய பாஜக–NDA அரசின் தவறான வெளியுறவுக் கொள்கையாலும், போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்காததாலும் ஏற்பட்டுள்ள சமையல் எரிவாயு தட்டுப்பாட்டைக் கண்டித்தும், தமிழ்நாட்டைத் தொடர்ந்து வஞ்சித்து வரும் பா.ஜ.க. அரசையும் அதன் அடிமைக் கூட்டணியையும் கண்டித்து மதச்சார்பற்றம முற்போக்குக் கூட்டணி சார்பில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட திருத்தணி வடக்கு ஒன்றியத்தில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது இதில் மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ.கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார். இதில் திருத்தணி வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் விஜயகுமார், தேமுதிக மாவட்ட செயலாளர் டி.கிருஷ்ணமூர்த்தி, விசிக திருத்தணி தொகுதி தொகுதி மாவட்ட செயலாளர் தண்டபாணி, மற்றும் திமுகவினர் கூட்டணி கட்சி நிர்வாகிகள் மற்றும் பெண்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.




சமையல் எரிவாயு மற்றும் பெட்ரோல் தட்டுப்பாட்டை சரி செய்யக்கோரி சென்னை கிழக்கு மாவட்டம் திரு வி க நகர் சட்டமன்றத் தொகுதியில் நேற்று மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் கழக துணை அமைப்பு செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ப.தாயகம்கவி தலைமையில் நடைபெற்றது. இதில் மேயர் பிரியா உள்ளிட்ட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.



தமிழ்நாட்டிற்குத் தேவையான வளர்ச்சித் திட்டங்களை வழங்காமலும், ஏழை எளிய மக்களின் அன்றாட வாழ்வை பாதிக்கும் வகையில் சமையல் எரிவாயு சிலிண்டர் விலையைக் குறைப்பதாக ஏமாற்றியும் தொடர்ந்து வஞ்சித்து வரும் பா.ஜ.க. அரசைக் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் சார்பில் இன்று (15.03.2026) கடலூர் மேற்கு மாவட்டம் விருத்தாசலம் நகர கழகத்தில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் அமைச்சர் சி.வெ. கணேசன் கலந்து கொண்டு கண்டன முழக்கங்கள் எழுப்பினர்.



சென்னை மேற்கு மாவட்டம், அண்ணா நகர் தெற்கு பகுதியில், நேற்று மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு தலைமையில், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தமிழகத்தின் உரிமைகளைத் தொடர்ந்து தட்டிப்பறிக்கும் ஒன்றிய பாஜக அரசின் மக்கள் விரோதப் போக்கைக் கண்டித்தும், குறிப்பாகத் தமிழகத்திற்குத் தேவையான சமையல் எரிவாயு தட்டுபாடு மற்றும் தமிழ்நாட்டிற்குத் தர வேண்டிய நிதிப் பகிர்வை வழங்காமல் வஞ்சிப்பதைக் கண்டித்தும், தமிழகத்தின் வளர்ச்சித் திட்டங்களுக்கு முட்டுக்கட்டை போடும் பாஜக அரசைச் சாடியும் இந்த ஆர்ப்பாட்டம் எழுச்சியுடன் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் எம்.பி., தேமுதிக பொருளாளர் எல்.கே.சுதீஷ் எம்.பி., பகுதிச் செயலாளர் ந.இராமலிங்கம் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் ஆயிரக்கணக்கான நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் திரளாகப் பங்கேற்று, ஒன்றிய அரசின் பாராமுகத்தைக் கண்டித்துத் தங்களது எதிர்ப்பைப் பதிவு செய்தனர்.



சென்னை தென்மேற்கு மாவட்ட கழகத்திற்கு உட்பட்ட மயிலாப்பூர் மேற்கு பகுதி சார்பில் பகுதி செயலாளர் நந்தனம் மதி தலைமையில் என்டிஏ கூட்டணியின் தமிழ்நாட்டிற்கு செய்யும் வஞ்சகப் போக்கை கண்டித்தும், கேஸ் தட்டுப்பாடு சீர் செய்ய முடியாத ஒன்றிய அரசை கண்டித்தும் பகுதி கழகங்களின் சார்பில் நடைபெற்ற மாபெறும் ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட செயலாளர் சட்ட மன்ற உறுப்பினர் மயிலை த.வேலு முன்னிலையில் மக்கள் நீதி மையம் துணைத் தலைவர் மவுரியாவுடன் கூட்டணி கட்சியைச் சார்ந்த நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



சமையல் எரிவாயு தட்டுப்பாட்டைக் கண்டித்தும், தமிழ்நாட்டைத் தொடர்ந்து வஞ்சித்து வரும் பா.ஜ.க. அரசையும் அதன் அடிமைக் கூட்டணியையும் கண்டித்து மதச்சார்பற்றம முற்போக்குக் கூட்டணி சார்பில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கடம்பத்தூர் கிழக்கு ஒன்றியம் மணவாள நகரில் மாவட்ட அவை தலைவர் கே.திராவிட பக்தன் தலைமையில் ஒன்றிய கழகச் செயலாளர் க.அரி கிருஷ்ணன் முன்னிலையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார். உடன் நிர்வாகிகள் ஆர்.டி.இ.ஆதிசேஷன், செங்குட்டவன், சி.ஆர்.குமரன், கொப்பூர் ஆர்.திலீப்குமார், தாடி நந்தா கோபால், மதியழகன், பி.ஆர்.பிரபாகரன், மோகனசுந்தரம், ராஜேந்திர குமார், சதீஷ் பாஸ்கர், மற்றும் கழக நிர்வாகிகள் கூட்டணி கட்சி சார்ந்த தோழர்கள் கலந்து கொண்டனர்.